**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 115/2020 வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரணிதரன் | வயது | : 63 |
| த.பெ | : குப்பிசாமி | தாலுக்கா : | |
| கிராமம் | : தற்போது ஒசூர் | தொழில் : வக்கீல் குமாஸ்தா | |

**17.06.2025 – வா.சா. 2 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3 ம் நபர் ஆவேன். நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் விவங்களும் உண்மை.

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**முதல் விசாரணை முடிவடைந்தது.**

**குறுக்கு விசாரணை- (பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பில் ஆன குறுக்கு விசாரணை)**

1. நான் வக்கீல் குமாஸ்தாவாக ஒசூரில் பணிபுரிந்து வருகிறேன். வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால், வாதியின் அண்ணா பெயர் ஜே.கு.சுப்பிரமணியன், அண்ணி சசிகலா சுப்பிரமணியன் ஆகியோர் போளூர் வழக்கறிஞராக இருந்தார்கள் அவர்களிடம் நான் வேலை பார்த்தால் எனக்கு வாதியை தெரியும். எனக்கு 1981 முதல் 2001 வரை நான் மேற்படி வாதியின் அண்ணா அவர்களிடம் வேலை பார்த்தேன். அப்போது வரை வாதியை எனக்கு நன்கு தெரியும். நான் வாதியின் அண்ணா, அண்ணியிடம் வக்கீல் குமாஸ்தாவாக தான் வேலை செய்தேன். நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1981 முதல் 1995 வரை மட்டும் தான் வாதியின் அண்ணனிடம் வேலை பார்த்தாக கூறியிருந்தேன் என்றால் சரிதான். 1995 முதல் 2001 வரை ஏ.ராஜேந்திரன் வழக்கறிஞரிடம் குமாஸ்தாவாக வேலை செய்தேன். மேற்படி விவரத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி வாதியின் அண்ணன், அண்ணி அவர்களிடம் 2001 வரை குமாஸ்தாவாக வேலை செய்ததாக நான் கூறியது தவறு என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தற்சமயம் ஒசூரில் வசிப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதியின் கணவர் ஜகன்நாதன் வடமாதிமங்களம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், பின்னர் வேறு வேறு ஊர்களுக்கு மாறுதலாகி அரசு முதுநிலை பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து

வந்தார் என்றால் வாதி அவருடைய அண்ணன் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வார் அதன்மூலம் எனக்கு தெரிந்தது. வாதி வருடத்திலிருந்து எந்த வருடம் வரை வடமாதிமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வாதியின் கணவர் அதன்பிறகு பணிமாறுதலில் சென்றுவிட்டார் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறும் நிலையில் அவர் எந்த ஊருக்கு பணிமாறுதல் பெற்றார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் வாதி கூறி தான் அவர் பணிமாறுதல் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியும்.

3. வாதிக்கும், ஜகன்நாதன் அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றதாக நான் குறிப்பிட்டு இருக்கிறேன். என்னை யார் திருமணத்திற்கு அழைத்தார்கள் என்றால் நான் வாதியின் அண்ணனிடம் வேலை பார்த்ததால் என்னை அழைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் வாதியின் அண்ணன் வீட்டில் குடும்பத்தில் ஒரு நபராக இருந்ததால் எனக்கு அழைப்பு யாரும் விடுக்கவில்லை. வாதி எந்த ஊரில் அவர் கணவருடன் வாழ்ந்து வந்தார் என்றால் ஆலம்பூண்டியில் வாழ்ந்து வந்தார். எனக்கு தெரிந்த வரை 2001 வரை இருவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள். அதன்பிறகு எனக்கு விவரம் எதுவும் தெரியாது. மேற்படி இருவருக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்று அடிக்கடி கருத்து வேறுபாடு வந்து பிரிந்துவிட்டார்கள் என்றால் பிரிந்துவிடவில்லை அப்படி கருத்து வேறுபாடு வந்து சேர்ந்துவிடுவார்கள். 2001 வரை அவர்களுக்கு குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை.

4. வாதி, பிரதிவாதிக்கு எதிராக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி, ஜகன்நாதன் அவர்களுக்கு முதல் மனைவி என்றும், அவருக்கு பென்ஷன் வரவேண்டும் என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். (சாட்சி தற்போது ஒரே மனைவி என்று கூறுகிறார்). வாதி ஜகன்நாதன் அவர்களின் 2 ம் மனைவி குழந்தைகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பிரதிவாதிகள் 1 மற்றும் 2, ஜகன்நாதன் அவர்களின் குழந்தைகளா என்று எனக்கு தெரியாது. நான் வாதிக்கும் ஜகன்நாதன் அவர்களுக்கும் திருமணம் நடைபெற்ற விவரமும், அவர் பள்ளியில் வேலை பார்த்த விவரமும் மட்டும் தான் நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதி கூப்பிட்டதன் அடிப்படையில் தற்போது நான் சாட்சியம் கூறவந்துள்ளேன்.

**(மேற்கண்ட குறுக்கு விசாரணையை 3 முதல் 5 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் ஏற்றுக்கொள்கிறார்)**

Sd/-B.Salma,

District Munsif,

Polur.